**சுருக்கம்**

முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் – செய்தித்துறையில் அங்கீகரிக்கப்பட்ட செய்தியாளர்கள் மற்றும் பருவ இதழ் செய்தியாளர்களுக்கு முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தின்கீழ் பயனாளிகளாக இணைத்து ஆணை வெளியிடப்படுகிறது.

---

மருத்துவம்– மக்கள் நல்வாழ்வுத் (அஉதி1–1) துறை

**அரசாணை (நிலை) எண் 545** நாள் 03.12.2021

**திருவள்ளுவர் ஆண்டு: 2052**

**பிலவ, கார்த்திகை– 17**

**படிக்கப்பட்டது:**

திட்ட இயக்குநர், தமிழ்நாடு சுகாதாரத் திட்டம் அவர்களின் கடித ந.க.எண்.4623/தநாசுதி/காப்பீடு/ 2021, நாள்: 13.09.2021.

---

ஆணை:

மாண்புமிகு அமைச்சர் (மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வு) அவர்களால் சட்டமன்ற கூட்டத் தொடரில் அறிவிப்பு எண்.78 மூலம் கீழ்க்காணும் அறிவிப்பு வெளியிடப்பட்டது:-

"முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் பயனாளிகளின் குடும்ப ஆண்டு வருமானம், தற்போது ரூபாய் 72,000/– ஆக உள்ளது. பத்திரிகையாளர்களின் நீண்டநாள் கோரிக்கையை நிறைவேற்றும் வண்ணம், அரசால் அங்கீகரிக்கப்பட்ட பத்திரிக்கையாளர்களின் குடும்பங்கள் வருமான உச்சவரம்பின்றி முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் பயனாளிகளாக சேர்த்துக் கொள்ளப்படுவார்கள்".

2. மேற்கண்ட அறிவிப்பின்படி, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி (செய்தி வெளியீடு)த் துறையால், 2021 ஆம் ஆண்டில் 771 அங்கீகார அட்டைகளும், 643 செய்தியாளர் அட்டைகளும் புதுப்பித்து வழங்கப்பட்ட நிலையில், 1414 (771+643) செய்தியாளர்களை முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் இணைக்குமாறு அத்துறை கேட்டுக் கொண்டுள்ளது எனத் தமிழ்நாடு சுகாதாரத் திட்ட இயக்குநர் தெரிவித்து, சட்டப்பேரவை மானியக் கோரிக்கை அறிவிப்பில் உள்ளவாறு அரசால் அங்கீகரிக்கப்பட்ட பத்திரிகையாளர்களின் குடும்பங்களை தற்போதுள்ள ஆண்டு வருமானம் ரூபாய் 72,000/– என்பதை, எந்த வித உச்சவரம்பின்றி, முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் பயனாளிகளாக இணைத்து செயல்படுத்துவதற்கு உரிய அரசாணை வழங்குமாறு அரசினை கேட்டுக் கொண்டுள்ளார்.

3.மேற்காணும் தமிழ்நாடு சுகாதாரத் திட்ட இயக்குநரின் கருத்துருவினை அரசு நன்கு பரிசீலனை செய்து, அரசால் அங்கீகரிக்கப்பட்ட 1414 (771 அங்கீகரிக்கப்பட்ட அட்டைகள் + 643 செய்தியாளர் அட்டைகள்) பத்திரிக்கையாளர்களின் குடும்பங்களை வருமான உச்சவரம்பின்றி முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் இணைக்கவும், மேலும், இனிவரும் ஒவ்வோர் ஆண்டும் தமிழ்வளர்ச்சி மற்றும் செய்தித் துறையிடமிருந்து நடைமுறையிலுள்ள / எதிர்வரும் முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தின் விதிமுறைகளுக்குட்பட்டு அங்கீகரிக்கப்பட்ட செய்தியாளர்களின் பட்டியல்களைப் பெற்று முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தில் சேர்க்கவும் முடிவெடுத்து, அவ்வாறே அரசு ஆணை வெளியிடுகிறது.

4.இவ்வரசாணை, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறையின் அ.சா.கு.எண்.18456/செ.வெ/2021, நாள்: 30.09.2021 மற்றும் நிதித்துறையின் அ.சா.கு.எண்.45251/சுகாதாரம்–2/2021, நாள்: 30.10.2021 ஆகியவைகளின் இசைவுடன் வெளியிடப்படுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**ஜெ.ராதாகிருஷ்ணன்,**
**அரசு முதன்மைச் செயலாளர்.**

பெறுநர்
திட்ட இயக்குநர், தமிழ்நாடு சுகாதாரத் திட்டம், சென்னை–6.
தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி (செய்தி வெளியீடு)த்துறை, சென்னை–9
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள்,
மாநில கணக்காயர், சென்னை–18
மாநில (தணிக்கை) கணக்காயர், சென்னை–18
கருவூல கணக்கு அலுவலர், சென்னை–35.

<u>நகல்</u>
சிறப்பு நேர்முக உதவியாளர், மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை–9
சிறப்பு நேர்முக உதவியாளர், மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மை அமைச்சர் அலுவலகம், சென்னை–9.
சிறப்பு நேர்முக உதவியாளர், மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அலுவலகம், சென்னை–9.
நிதித் (சுகாதாரம் 2) துறை, சென்னை–9.
மருத்துவம்– மக்கள் நல்வாழ்வுத் (தகவு) துறை, சென்னை–9.
உதிரி கோப்பு /இருப்பு கோப்பு

**//ஆணைப்படி அனுப்பப்படுகிறது //**

3.12.2021
**பிரிவு அலுவலர்**